RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s252

OPEN ACCESS

# கந்தர்வன் படைப்புகளில் பெண்ணிய பதிவுகள்

ச.ம. மாசிலாமணி [அ, *], வா. சித்ரா [அ]

[அ] தமிழ்த்துறை, இரத்னவேல் சுப்ரமணியம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சூலூர், கோயம்புத்தூர்-641402, தமிழ்நாடு, இந்தியா

# Feminist Inscriptions in Gandharvan Works

S.M. Masilamani [a, *], V. Chitra [a]

[a] Department of Tamil, Rathnavel Subramaniam College of Arts & Science, Sulur, Coimbatore-641402, Tamil Nadu, India

* Corresponding Author: chitra.v@rvsgroup.com

Received: 29-07-2022
Revised: 23-09-2022
Accepted: 11-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Superiority of women is one of the factors that hinder the progress of the society. Both men and women are part of society. Today's society will be better if both the genders are treated equally in knowledge, have equal rights, and live in harmony with love and virtue. But today's society is a patriarchal society. Women remain enslaved and marginalized, even though some rights have been given to women, the fundamental changes for complete women's emancipation have not yet taken place. Human emancipation will be complete only when fundamental changes take place and women's emancipation is complete. Feminine is the characteristic of love, female is the form of virtue. Woman is the primary source of life and growth she is the source of strength, the pinnacle of sacrifice, the protector of duty and the abode of patience. Poets have described about such feminine qualities in their works. In the field of Tamil literature, the term "Penniyam" refers to feminism and many works are created based on it. Feminism is one of the various academic fields that are emerging today. Today's research on feminism through the fields of anthropology, psychology, linguistics, sociology, and history is increasing. Similarly, many researches have appeared in the field of literature on women's creative issues. Thus, this article examines the ideology of women in kandarvan's works.

**Keywords:** Kandarvan, Feminism, Psychology, Woman

## முன்னுரை

வரலாற்றின் தொடக்க காலத்தில் பெண்ணடிமைத்தனம் என்னும் இழிநிலை இல்லை. உணவு சேகரிக்கத் தொடங்கிய காலத்திலிருந்து, உணவு சேமிக்கும் அடுத்த நிலையை அடைந் போது ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே பிரிவு தோன்றியது. எனினும் இது இருவரிடையே ஏற்றத்தாழ்வை ஏற்படுத்தவில்லை. பின்னர் நிலவுடைமைச் சமுதாயம் தோன்றியது. பெண்கள் ஆதி நிலக்கிழார்களாக இருந்தனர். நிலவுடைமையும், சொத்துடைமையும் பெண்களுக்கே இருந்து வந்தன. “ஆநிரை” வாழ்க்கை தொடங்கிய காலத்தில் ஆணாதிக்கம் உருவாகத் தொடங்கியது. பொருள் உறப்பத்தியிலிருந்து மெல்ல மெல்ல பெண் விலக்கப்பட்டாள்.

“பொருள் ஈட்டுவோர் ஆணாக ஆகி, வெளியே வேலை செய்வோரும் ஆணாக இருந்ததால் வீட்டை ஆட்சி செய்யும் பெண்மணியாகப் பெண் பொறுப்பேற்கத் தொடங்கினாள். இதுவே பெண்ணடிமைத் தனத்தின் அழுத்தமான தொடக்க நிகழ்ச்சி” இந்த ஏற்றத் தாழ்வில் பெண்கள் வலிமையற்றவர்களாக ஆக்கப்பட்டனர் (Thayammal, 1992). பொருளாதார உற்பத்தியிலிருந்து விலக்கப்பட்ட

பெண், குழந்தை உற்பத்திக்கென்றே ஆக்கப்பட்டாள். அதன் விளைவாகப் பெண்ணானவள் ஒரு போகப் பொருளாகப் பார்க்கப்பட்டாள்.

"உலக வரலாற்றில் தாய்வழிச் சமுதாயத்தின் வீழ்ச்சி பெண்ணினத்திற்கு ஏற்பட்ட பெரும் வீழ்ச்சி" என்பார் எங்கெல்ஸ் (Engels, 2021). தந்தை வழிச்சமூகத்தின் ஆதிக்கம் பெண்ணை இரண்டாம் தர உயிரியாக்கி சந்ததி ஈன்று தரும் உற்பத்திப் பொருளாக மாற்றியது.

## பெண்ணின் பெருமை

ஒரு குடும்பத்தின் வெற்றியும் தோல்வியும் பெண்ணிடம் தான் உள்ளது என்பது சான்றோர் வழக்கு. திருவள்ளுவர்,

"பெண்ணின் பெருந்தக்க யாவுள"

எனக்கேட்டுப் பெண்மையின் சிறப்பை உணர்த்துகிறார் (Puliyur Kesigan, 2009).

"சுமூகமாக இல்வாழ்க்கை நடத்த இங்கிதம்

அறிந்த மனைவி வேண்டும்"

என்கிறது உபநிடதம்.

மகாபாரதமும், இராமாயணமும் பெண்களை முன்னிலைப் படுத்தியதால் தான் இன்றும் பேசப்பட்டு வருகின்றன. சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இரட்டைக் காப்பியங்களும் மகளிரின் சிறப்பாலேயே நிலைத்து நின்று போற்றப்பட்டு வருகின்றன. சிலப்பதிகாரம்,

"உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்"

என்று பெண்மையின் சிறப்பைஉலகிற்கு உணர்த்துகிறது (Subramaniyam, 2015). பாரதியார்,

"பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா?

பெண்மை வெல்கென்று கூத்திடு வோமடா?"

என்று பெண்மையை கொண்டாடி மகிழ்கிறார் (Bharathiyar, 2021). பெண்களுக்குத் துன்பம் செய்பவர்களைப் பாரதிதாசன் "குள்ளர்கள்" என்கிறார் (Bharathidhasan, 2002). சமுதாயத்தில் ஆணைப் பெற்றுத் தருவது பெண்ணினமே என்பதை சங்க இலக்கியத்தில்,

"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே"

என்று பொன்முடியார் புறநானூற்றில் சான்று பகன்றுள்ளார் (Swaminatha Iyer, 2014). பெண் இல்லையேல் மனித உயிர்களின் தோற்றமே இல்லை. ஆணின் வாழ்வில் மகளாய், உடன்பிறந்தவளாய், மனைவியாய், தாயாய் இணைந்து வாழ்பவள். இத்தகையை சிறப்புகளைப் பெற்ற பெண் குறித்து கந்தவர்வன் தனது படைப்புகளில் பதிவு செய்துள்ளார்.

## கவிதைகளில் பெண்ணடிமைத்தனம் குறித்த பதிவுகள்

"பெண்ணென்று பூமிதனில் பிறந்து விட்டால், பெரும் பீழை இருக்குதடி தங்கமே தங்கம்" என்கிறார் பாரதியார். பெண்ணாகப் பிறந்து விட்டால், குழந்தைப் பருவத்தில் தந்தைக்கும், திருமணமான பிறகு கணவனுக்கும், அதன் பிறகு மகனுக்கும், அடிமையாக வாழவேண்டிய அவலநிலையைக் கந்தர்வன்,

"தவழ்ந்த போது

பெண்

தகப்பனுக்கடிமை

கையைப்பிடித்ததும்

கணவனுக்கடிமை

கிழவியானதும்

மகனுக்கடிமை

ஆண்கள் பூட்டிய

அடிமை விலங்கை

அவளிடமிருந்து

அகற்றிச் சென்றது

மரணம் ஒன்று தான்"

என்ற வரிகளில் விளக்குகிறார் (Kandharvan, 2015).

பெண் இல்லத்தில் சிறைப்பட்டுக் கிடந்ததால் இலக்கியங்கள் அவளை 'மனையுறை மகளிர்' என்றும் 'இல்லாள்' என்றும் வருணித்தன. இந்தச் சொற்களுக்கு இணையான ஆண்பாற் சொற்கள் இல்லை. இந்த அடிமைச் சொற்கள் பெண்ணின் அவலநிலைக்குச் சான்றாக அமைந்துள்ளன. இன்று சமுதாய உழைப்பில் ஈடுபட்டுள்ள பெண்கள் வீட்டுச்சிறையை விட்டு வெளியே வரத்தொடங்கியிருந்தாலும் அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. பெரும்பாலானோருக்கு இன்னும் வீடு சிறையாகவே உள்ளது. பெண்களின் இந்த நிலையை,

"சுதந்திர இந்தியாவில்

மற்றவர்கள்

விலங்குகளோடுவாழ்ந்தாலும்

வெளியிலேயும்வாழலாம்

நீங்களோ

விலங்குகளோடு

சிறைகளில்

வாழ்கிறீர்கள்"

என்ற 'கிழிசல்கள்' கவிதை வரி மூலம் தெளிவுபடுத்துகிறார் (Kandharvan, 2015).

பண்டைக் காலத்தில் தோன்றிய சமய, இலக்கிய, இலக்கண நூல்களும் நிலவுடைமையின் சார்பாக நின்று பெண்ணடிமைத்தனம் நிலைக்கவும் ஒடுக்கு முறைகள் வளரவும் துணைபோயின.

"வினையே ஆடவர்க்கு உயிரே, வாள்நுதல்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என"

என்று இலக்கியங்கள் அறிவுறுத்தின.

பெண்கள் தம்விருப்பப்படி எதுவும் செய்யக் கூடாதென சாத்திரங்கள் சட்டங்கள் இயற்றின. தமிழ் இலக்கணத்தையும் தமிழர் வாழ்வியல் இலக்கணத்தையும் வெளிப்படுத்தும் தொல்காப்பியம்,

"தன்னுறு வேட்கை கிழவன்முற் கிளத்தல்

எண்ணுங் காலைக் கிழத்திக் கில்லைப்"

என்றும்

"முந்தி வழக்கம் மகடூஉவோடு இல்லை"

என்றும் பெண்ணை ஒடுக்கும் வகையில் இலக்கண விதிகளைக் கொண்டுள்ளது.

பிறக்கும் போதே பெண்ணுக்கு விலங்கு பூட்டப்படுகிறது. அந்த விலங்கின் சாவியைத் தந்தை தன் கையில் வைத்துக் கொள்கிறார். பெண்ணுக்குத் திருமணம் நடக்கும் போது அவர் அந்தச்சாவியை அவளது கணவன் கையில் கொடுக்கிறார். அவள் விதவையான பின் அந்தச் சாவி அவளது மகனின் கைக்கு வருகிறது. பெண்ணின் கையில் விலங்கும் ஆணின் கையில் சாவியும் தலைமுறை தோறும் தொடர்கின்றன என்ற கருத்தை 'சாவி' என்ற கவிதையில் விளக்கியுள்ளார்.

"பெண்ணைக் கொடுத்த

தகப்பன் மாப்பிள்ளையிடம்

ஒரு சாவியைத் தந்தார்

என்ன இது என்றான்

மாப்பிள்ளை பெண் பிறந்தபோது

விலங்கைப்பூட்டினேன்

பெண்ணோடும்விலங்கோடும்

சாவியைஎடுத்துப்போ

என்றார் பெரியவர்

சாவியை அவன்

சாகும்வரை

பாதுகாத்தான்

அவன்

பிணத்தைத்தூக்கிப்

பாடையிலேற்றையில்

படுக்கையை மகன்

துழாவிப் பார்த்தான்

தலையணையடியில்

சாவி இருந்தது.

மகன் எடுத்துப்

பத்திரப்படுத்தினான்

அம்மா விலங்கிற்கு

இப்போது

மகனிடம் சாவி

விலங்குச் சாவி

வம்சாவளிச் சொத்து

வரிசையாய்

விலங்குகள்

தொடர்ச்சியாய்

சாவிகள்" (Kandharvan, 2015)

நம் நாட்டுப் பெண்கள் இல்லச் சிறையில் அடைந்து கிடப்பதிலும், தங்களை அழகுப்பதுமைகளாக ஆக்கிக் கொள்வதிலும், புனைந்துரைகளைக் கேட்பதிலும் இன்பம் காண்பவர்களாக உள்ளனர். தன் இனம் அடிமைப் படுத்தப்பட்டுக் கிடப்பதையும் மறந்து தன்னை அணிகலன்களால் அழுகுபடுத்திக் கொள்வதிலேயே நாட்டம் கொள்கின்றனர். அவர்கள் அணியும் ஆபரணங்களே அவர்களை அடிமைப் படுத்துவதற்காக அளிக்கப்பபட்ட விலங்குகள் என்பதை,

“தலையில் பூவிலங்கு

கையில் பொன்விலங்கு

காலில் வெள்ளி விலங்கு

சுவாசத்தடைக்கு

மூக்கில் கல் விலங்கு

ஒவ்வொரு மூச்சிலும்

அவள்

விலங்குகளை நுகர்கிறாள்"

என்ற கவிதை வரிகளில் விளக்கியுள்ளார் (Kandharvan, 2015).

மனித வரலாற்றில் குடும்பம் முதன்மையான நிறுவனமாக விளங்கியதாக மானுட வியலாரும் சமூகவியலாரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். அன்றும் இன்றும் என்றும் மனித சமூகத்தில் அடித்தளமாக விளங்கும் குடும்பம் உளவியல் மற்றும் உயிரியல் தேவையினைப் பூர்த்தி செய்யும் கடப்பாட்டினைக் கொண்டு விளங்குகின்றது. குடும்பத் தோற்றத்தினைச் சமூகவியலார் பல்வகைக் கோட்பாடுகளைக் கொண்டு விளக்குகின்றனர். பாலியல் பொதுவுடைமைக் கொள்கை, தாய்வழிக் குடும்பம், தந்தை வழிக்குடும்பம், ஒருதாரமணம், பரினாமக் கொள்கை ஆகிய ஐந்து நிலையினைக் குடும்பம் என்ற நிறுவனம் கடந்து வந்துள்ளதுஎன்கின்றனர்.

இத்தோற்றக் கொள்கை அடிப்படையில் மாக்வெர் எனும் சமூகவியலார் குடும்பத் தோற்றம் 1. பாலியல் 2. மக்கட்பேறு 3. பொருளாதாரம் ஆகியவற்றின் அடிப்படையில் தோன்றியது என்கிறார். குடும்பத் தோற்றத்தின் காரணங்களுள் ஒன்றாகிய மக்கட்பேறு பெண்களைப் பெருமளவு அடிமைப்படுத்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

“அம்மா என்றும்

தாய்க்குலம் என்றும்

உங்களை விளிக்கும்

எல்லாப்புனிதச்சொற்களுக்கும்

ஓர் அர்த்தம் உண்டு

அதுதான் அடிமை என்பது

நாளும் கிழமையும்

நலிந்தோர்க்கில்லை

ஞாயிற்றுக்கிழமையும்

பெண்களுக்கு இல்லை" (Kandharvan, 2015)

என்ற கந்தவர்வனின் கவிதை வரிகள் பெண்ணடிமைத் தனத்தை விளக்குவதாக அமைந்துள்ளது.

## முடிவுரை

சமுதாய முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கும் மிகப்பெரிய காரணியாகப் பெண்ணடிமைத் தனம் இருப்பதைக் கந்தர்வனின் கவிதைகள் வழி அறியமுடிகிறது. காலந்தோறும் பெண் விலங்கு பூட்டப் பட்ட அடிமைபோல வாழும் நிலை சமுதாயத்தில் நிலவுகிறது என்பதை உணர முடிகிறது. கல்வியறிவு, பொருளீட்டுதல் போன்றவற்றில் திறமையானவளாகப் பெண்கள் இருந்தால் கூட அவர்கள் அடிமைப் படுத்தப்படுவது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## References


Bharathidhasan, (2002) Bharathidhasan Kavithaikal, Srisenbaga Pathipagam, Chennai, India

Bharathiyar, (2021) Bharathiyar kavithaikal, Tirumagal Nilayam, Chennai, India

Engels, F. (2021) The origin of the family, private property and the state, Verso Books, UK.

Kandharvan (2015) Kantharvan Kavithaikal, Bharathi Puthakalayam, Chennai, India

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

Subramaniyam, S.V. (2015) Silappathikaram, Gangai Puthaga Nilayam, Chennai, India

Swaminatha Iyer, U.V. (2014) Purananooru Moolamum Uraiyum, U.Ve.Sa, Noolaga nilayam, Chennai, India.

Thayammal, A. (1992) Pennarivu Enbathu, Puducherry, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License